IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

MCOP.NO. - 514/2024

P.W.1 - திருமதி. கோமதி

DATE - 07.11.2025.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 07.11.2025.

**ம.சா.1 குறுக்கு விசாரணை–**

போலீசாரிடம் புகார் நான் தான் கொடுத்தேன். விபத்து சம்பந்தமாக நான் வீட்டில் இருந்தபோது தகவல் சொன்னார்கள், என் கணவர்க்கு தலையில் தான் காயம் ஏற்பட்டது. கணவர் TVS 50 XL வாகனத்தை ஓட்டிச்சொன்றார். TVS 50 XL வாகனம் என் கணவர் பெயரில் தான் உள்ளது. இரு சக்கர வாகனத்திற்கு இஸ்சுரன்ஸ் பாலிசி வண்டிலேயே இருந்தது மற்றும் இருசக்கர வாகனம் போலிஸ் நிலையத்தில் சேதாரம் அதிகமாக இருந்ததால் எடுக்கவில்லை. எனது கணவர் தலைகவசம் அணிந்து இருந்தார். எனது கணவர் விபத்து சமயம் தலைகவசம் அணியவில்லை என்றும் அதனால் தான் தலையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவர் இரு சக்கர வாகனம் ஓட்டுவதர்க்கு ஓட்டுநர் உரிமைம் வைத்துள்ளார். எனது கணவர் இரு சக்கர வாகனம் ஓட்டுநர் உரிமைத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது கணவர் எந்த விலாசத்தில் ஓட்டுநர் உரிமைம் எடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது கணவக்கு ஒட்டுநர் உரிமைம் இல்லை என்றும் வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றும் பொது இடத்தில் வாகனத்தை ஒட்ட தெரியாமல் ஓட்டி அவரே விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. இரண்டு வாண்டிகளும் எதிர் எதிரே மோதிக்கொண்டது என்றால் சரி. எனது கணவர் தானாக விலுந்து விபத்து ஏற்படுத்தி கொண்டார் என்றும் அதனால் தான் உடல் உள்ளுருப்புகள் ஆய்விற்கு நிலுவையில் இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் புகார் கொடுத்திருந்தாலும் இரண்டாம் எதிர்மனுதாரர் வாகனத்தை எதிரி காலத்தில் போலீசார் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

மோட்டர் ஆய்வாளர் அறிக்கையிலும் லாரிக்கு எவ்வித சேதாரமும் இல்லை என்று குறிப்பிடப்பட்டு இருந்தால் அதை பற்றி எனக்கு தெரியாது.எனது கணவர் மேஸ்திரி வேலை செய்துவந்தார் வருமானத்திற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவருடைய வயது குறித்து சான்று எதுவும் இல்லை. 2, 3 மனுதாரர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. 4 மனுதாரார்க்கு திருமணம் ஆகவில்லை. 2, 3 மனுதாரர்களுக்கு திருமணம் ஆகிவிட்டதால் எனது கணவரின் வருமானத்தை நம்பி இல்லை என்றால் சரியல்ல. எனது கணவருக்கு ஒட்டுநர் உரிமம் இல்லததனாலும் தலைகவசம் அணியாமலும் வாகனத்தை ஒட்ட தெரியாமல் ஒட்டி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்றால் சரியல்ல. நான் கூறியுள்ள இழப்பீடு அதிகபடியானது என்றும் 2ஆம் மனுதாரர்ரை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட

வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 07.11.2025 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2025.11.07 18:41:30 +0530

Additional District Judge(FTC),

Vellore.